# இலங்கை வங்கி

நாடளாவிய வலுவான கிளை வலையமைப்பையும் இலண்டனில் உள்ள துணை நிறுவனம் உட்பட பரந்தகன்ற வெளிநாட்டு வங்கி வலையமைப்பையும் கொண்டுள்ளதும் உலகளாவிய அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாக தரப்படுத்தப்பட்டுள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கியாகவும் இலங்கையின் 1ம் தர வங்கியாகவும் தரப்படுத்தப்பட்டுள்ள இலங்கை வங்கி பின்வரும் பதவிக்கு பொருத்தமான தகைமைகளும் அனுபவமும் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

## பொறியியலாளர் - தரம் III (சிவில்)

### தகுதிப் பிரமாணங்கள்

➤ **இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.**

➤ **தகைமைகளும் அனுபவமும்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பொறியியல் (சிவில்) விஞ்ஞான இளமாணிப் பட்டம் அல்லது அதற்குச் சமமான பட்டம் மற்றும் கட்டட நிர்மாணம், திருத்த மற்றும் பராமரிப்பு வேலைகள், ஒப்பந்த நிர்வாகம் ஆகியவற்றில் 2 வருட தொழில் அனுபவம்.

அல்லது

தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா அல்லது அதற்கு இணையான தகைமையும் கட்டட நிர்மாணம், பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றில் 5 வருட தொழில் அனுபவமும்.

➤ **ஏனைய பண்புகள்**

- மிகக் குறைவான மேற்பார்வையின்கீழ் வேலை செய்யக்கூடிய ஆற்றல்
- குழுவாக இணைந்து செயற்படுமாற்றல்
- ஆங்கிலத்தில் வேலை செய்யக்கூடிய ஆற்றல்.
- கணினி அறிவு
- ஊக்கமும் பெறுபேறுகளை மையமாகக்கொண்டு செயற்படுமாற்றலும்

➤ **வயது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 40 வருடங்கள் அல்லது அதற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்

➤ **விதிகளும் நிபந்தனைகளும்**

- இப்பதவி வழமையான வங்கிச் சேவைக்கு புறம்பானதெனினும் (மூடிய சேவை) வங்கியின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
- விண்ணப்பதாரர் தகுதிகாண் காலத்தின் தேவைப்பாடுகளை வங்கி திருப்தியுறும் வகையிற் பூர்த்திசெய்யும்பட்சத்தில் அவர் தகுதியானவர் எனக் கருதப்பட்டால் ஓராண்டு கால தகுதிகாண் காலத்திற்குப் பின்னர் பொறியியலாளர் - தரம் III (சிவில்) பதவியில் வங்கியின் நிரந்தர ஆளணிக்குள் ஈர்க்கப்படுவார்.
- இப்பதவிக்கான சம்பள அளவுத்திட்டம் :

ரூ. 62,060/= - ரூ. 81,660/=

ரூ. 980/= x 20

(அனைத்தும் உள்ளடங்கலாக மாறும் வாழ்க்கைச்செலவுப் படியுடன் மாதாந்த மொத்தச் சம்பளம் ஏறத்தாழ ரூ. 154,000/= ஆகும்)

- வார இறுதி / விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல்
- வங்கியின் தேவைக்கேற்ப நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றக்கூடியவராக இருத்தல்
- தேவைப்படும்போது வெளிக்கிளைகளுக்குப் பயணம் செய்யக்கூடியவராக இருத்தல்

### தெரிவு நடைமுறை

மேற்கூறப்பட்ட தகுதிப் பிரமாணங்களின் அடிப்படையில் பட்டியற்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வு ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

### விண்ணப்ப நடைமுறை

உங்களது முழுமையான சுயவிபரக் கோவையினை உறவுமுறை சாராத இரண்டு நபர்களின் தொடர்பு விபரங்களுடன் தேவையான அனைத்துச் சான்றிதழ்களின் நிழற் பிரதிகளுடனும் மற்றும் அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளுடனும் இணைத்து **11.05.2024ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கும் வகையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

**விண்ணப்பத்தின் முடிவுத் திகதியில் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தொடர்புடைய சான்றிதழ்களின் நிழற்பிரதிகளைக் கொண்டிராத அல்லது உண்மைக்குப் புறம்பாக தகவல்களைக் கொண்ட அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தக் கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.**

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**இலங்கை வங்கி**
**மனித வளப் பிரிவு**
**26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,**
**"இலங்கை வங்கிச் சதுக்கம்"**
**இல.01, இலங்கை வங்கி மாவத்தை**
**கொழும்பு 01.**

- தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.
- பட்டியற்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.
- நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பைப் பிற்போடும் / இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.
- வங்கியானது அதன் தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க உங்கள் தகவல்களின் தனியுரிமையையும் இரகசியத்தன்மையையும் பாதுகாக்கிறது.

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்